செ.வெ.எண்-28 நாள்-11.03.2021

# அரியலூர் மாவட்டம்

## 100 சதவீதம் வாக்களிப்போம் குறித்த விழிப்புணர்வு மிதிவண்டி பேரணியினை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.தியாகராஜன் அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்திய தேர்தல் ஆணையம் வரும் **சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021** முன்னிட்டு தேர்தலில் 100 சதவீதம் வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டுமென வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த உத்தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டத்தில் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், அரியலூர் மாவட்டத்தில் வாக்காளர் விழிப்புணர்வு குறித்து பல்வேறு துறைகளின் சார்பில் தப்பாட்டம், கரகாட்டம், மாடாட்டம், ஓவிய கோலம் வரைதல், விழிப்புணர்வு பேரணி, மனித சங்கிலி, ஒலிபெருக்கி வாகனம் மூலம் விழிப்புணர்வு பிரச்சாரம், வணிக வளாகங்கள் மற்றும் எருவாயு உருளைகளில் விழிப்புணர்வு ஒட்டுவில்லைகள் ஒட்டுதல், துண்டு பிரசுரங்கள் வழங்குதல், 100 சதவீதம் வாக்களிப்போம் மற்றும் தேர்தல் நாள் வடிவில் பள்ளி மாணவ, மாணவிகள் அமர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன மின்னணு விளம்பரத்திரை வாகனம் மூலம் அனைத்து கிராமங்களிலும் சென்று விளம்பர படக்காட்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

அதன்படி, 150.ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பாத்திமா பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 100 சதவீதம் வாக்களிப்போம் குறித்த பள்ளி மாணவிகளின் விழிப்புணர்வு மிதிவண்டி பேரணியினை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் **திரு.தியாகராஜன்** அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்த பேரணியில் 50 மேற்பட்ட பள்ளி மாணவிகள் கலந்துகொண்டு, வணிக வளாகங்களில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும், இப்பேரணியானது பள்ளியில் துவங்கி முக்கிய வீதி வழியாக வட்டாட்சியர் அலுவலகத்தில் நிறைவடைந்தது.

இந்நிகழ்ச்சியில், வட்டாட்சியர் கலைவாணன், பள்ளித்துணை ஆய்வாளர் பழனிசாமி, பாத்திமா பெண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் அமலோற்பவம் மற்றும் அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**